# மாகாண வீதி மேம்பாட்டுச் செயற்திட்டம் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) 2010

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட ஜென் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமையால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 666,150,626 ஆக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இள் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 8,430,277,943 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் 2010 | 2009 | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 471,942,942 | 1,744,692,978 | 6,614,695,346 |
| இயந்திமும் உபகரணங்களும் | - | - | 117,493,799 |
| மோட்டார் வாகனங்கள் | - | - | 48,257,308 |
| செயற்திட்ட நிர்வாகக் கிரயம் | 21,825,709 | 45,270,989 | 226,609,246 |
| கடன் வட்டி | 150,796,159 | 117,894,439 | 382,137,104 |
| விவேட (யென்) கணக்கிற்கான சேவைக் கட்டணங்கள் | - | - | 269,010 |
| ஆலோசனைக் கட்டணங்கள் | 21,585,816 | 163,266,164 | 1,040,816,130 |
| | 666,150,626 | 2,071,124,570 | 8,430,277,943 |

போதிலும் வங்கி எவ்வித கவனமும் செலுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும் செயற்திட்டமானது சட்டமா அதிபர் நாயக திணைக்களம் ஊடாக சட்ட சடவடிக்கை தொடங்கியிருந்தது. ஆனால் 2011 செப்டெம்பர் 23 வரை கணக்காய்விற்கு எவ்வித முன்னேற்றமும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) குறைவான செயலாற்றல் காரணமாகவும் செயற்திட்டத்தால் செய்யப்பட்ட ரூபா 82.8 மில்லியன் நட்டத்திற்காகவும் எஸ்ஜஆர்பி 1 ஆம் இலக்க பொதியின் கீழ் ரூபா 264.8 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் 2007 மே 09 ஆந்திகதி இரத்து செய்யப்பட்டதனால் ஒப்பந்தகாரரால் ரூபா 300.1 மில்லியன் தொகை கோரி மத்தியஸ்தர் ஊடாக சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டிருந்தது. 2011 செப்டெம்பர் 23 வரைகூட வழக்கு நிலுவையில் உள்ளது.

(iv) தனிப்பட்ட ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட சீஜகேடி 1 ஆம் இலக்க வீதிப் பொதியின் கீழ் ரூபா 276.1 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் ஒப்பந்தம் எவ்வித செயலாற்றலும் இன்மை காரணமாக 2007 யூன் 05 இல் செயற்திட்டத்தால் இரத்து செய்யப்பட்டிருந்ததுடன் வங்கி உத்தரவாதம் மற்றும் செயலாற்றல் பிணைமுறி காசாக்கப்பட்டதன் பின்னர் ரூபா 69 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்தகாரர் அவரிற்கு ஏற்பட்ட நட்டமாக ரூபா 211.5 மில்லியன் தொகை கோரி நியாயப்படுத்தல் சபையில் வழக்கு தொடுத்திருந்தார். செயற்திட்டமும் இழப்பீடாக ஒப்பந்தகாரரிடமிருந்து ரூபா 108 மில்லியன் கோரியிருந்தது. இந்த விடயம் 2011 செப்டெம்பர் 23 வரைகூட நிலுவையில் உள்ளது.